# புள்ளிகளை இணைத்து
# புள்ளினத்தைக் கண்டுபிடியுங்கள்



கருத்து, வடிவமைப்பு & ஓவியம்: அபிஷேகா கிருஷ்ணகோபால்
தமிழில்: சு.வே. கணேஷ்வர்

## சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

- பறவையின் தலையில் எத்தனை பட்டைகளை வரைந்தீர்கள்?

- [ ] 1
- [ ] 2
- [ ] 3

- இப்பறவையின் வாழிடம் எது?

- [ ] நீர்நிலைகள் அல்லது வயல்புறங்கள்
- [ ] காடுகள்
- [ ] கடல்

- பறவையின் அலைகைப் பார்த்து அதன் உணவு என்னவென்று கண்டுபிடியுங்கள்?

- [ ] பூச்சிகள்
- [ ] பழங்கள்
- [ ] புற்கள் மற்றும் விதைகள்

- இந்தப் பறவை மேற்கொள்ளும் உலகப்புகழ்பெற்ற செயலைப் பற்றி உங்கள் ஆசிரியரிடம் கேளுங்கள்.



## சில சுவாரசியத் தகவல்கள்...

வலசையின் போது இமயமலையின் உயரத்தைக் கடந்து பறப்பதால் **பட்டைத்தலை வாத்துகள்** (Bar-headed Goose) உலகப்புகழ் பெற்றுள்ளன. மத்திய ஆசியப் பகுதிகளில் இனப்பெருக்கம் செய்யும் இவை குளிர்காலத்தில் இந்தியாவிற்கு வலசை வருகின்றன.

வலசைக் காலத்தின் போது பட்டைத்தலை வாத்துகள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியத் துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெருங்கூட்டமாக இவற்றை ஏரிகள் மற்றும் வயல்புறங்களில் பார்க்கலாம். புற்கள், செடிகளின் இளம் தண்டுகள், குருத்துகள், வேர்கள் மற்றும் சில தானியங்களையும் உண்ணும்.

வெள்ளையான பெரிய உடலைக் கொண்டிருப்பதால் வயல்புறங்களில் இவை திரியும் போது நம் கண்களில் படாமல் இருக்காது. வெள்ளைத் தலையில் பளிச்சென்று தெரியும் கறுப்புப் பட்டைகளை வைத்தே இவற்றுக்கு பட்டைத்தலை வாத்து என்று அழகாக பெயர் சூட்டப்பட்டுள்ளது.

